செ. கு. எண்:76 நாள் :07.06.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.6.2016

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள ஆழியாறு அணையின் ஐந்து பழைய வாய்க்கால்களின் பாசன பகுதிகளுக்கு முதல் மற்றும் இரண்டாம் போக பாசனத்திற்காகவும், பொள்ளாச்சி நகர குடிநீர் தேவைக்காகவும் **ஆழியாறு அணையிலிருந்து** தண்ணீர் திறந்து விடக் கோரி, ஆழியாறு பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பொள்ளாச்சி வட்டத்திலுள்ள **ஆழியாறு அணையிலிருந்து 8.6.2016 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள **6,400 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதோடு, பொள்ளாச்சி நகர மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**